செய்தி வெளியீடு எண் : 2039 நாள் : 15.11.2022

## பொது நூலக இயக்ககம்

## செய்தி வெளியீடு

சென்னை, கோட்டூர்புரத்தில் அமைந்துள்ள அண்ணா நூற்றாண்டு நூலகத்தினை இன்று 15.11.2022 (செவ்வாய் கிழமை) காலை மொரிசியஸ் நாட்டின் அதிபர் திரு.பிருத்விராஜ்சிங் ரூபன் அவர்கள் வருகை புரிந்தார். அவர்களை பொது நூலக இயக்குநர் திரு க.இளம்பகவத் இ.ஆ.ப அவர்கள் வரவேற்றார்.

அப்போது, அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் முதல் தளத்தில் அமைந்துள்ள குழந்தைகள் பிரிவிலுள்ள புத்தகங்களைப் பார்வையிட்டார். குழந்தைகளுக்கு நடத்தப்படும் சிறப்பு நிகழ்வுகள் மற்றும் போட்டிகள் குறித்து பொது நூலக இயக்குநர் அவர்கள் எடுத்துரைத்தார்.

ஏழாம் தளத்திலுள்ள அரசினர் கீழ்த்திசை சுவடிகள் நூலகம் மற்றும் ஆய்வு மையத்தை பார்வையிட்ட போது, அங்கிருந்த பல்வேறு மொழிகளிலான பழங்கால ஓலைச்சுவடிகளை பற்றிய விவரங்களைக் கேட்டறிந்தார். மேலும், ஓலைச்சுவடிகளைப் பதப்படுத்தும் முறைகள் பற்றி அவருக்கு விளக்கப்பட்டது. வரலாறு மற்றும் சுற்றுலா பிரிவில் காணப்பட்ட மொரீசியஸ் நாடு மற்றும் அதன் கலாச்சாரம் தொடர்பான நூல்களை பார்வையிட்டார். குறிப்பாக, 1852 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட , Frederic J. Mouat என்பவர் எழுதிய 'Rough notes of a trip to Reunion, Mauritius, and Ceylon' மற்றும் 1914 ஆம் ஆண்டில் வெளியிடப்பட்ட Allister Macmillan என்பவர் எழுதிய 'Mauritius illustrated : historical and descriptive, commercial and industrial facts, figures, & resources' ஆகிய அரிய நூல்களைக் கண்டு வியந்து பாராட்டினார். மேலும், நான்காம் தளத்திலுள்ள பன்னாட்டு சட்டங்கள் தொடர்பான புத்தகங்களையும் பார்வையிட்டார்.

இதைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசால், ஜனவரி 2023–இல் நடத்தப்படவுள்ள பன்னாட்டு புத்தகக் கண்காட்சிக்கான அழைப்பிதழை மொரிசியஸ் நாட்டின் அதிபர் அவர்களுக்கு பொது

நூலக இயக்குநர் வழங்கினார். அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் வசதிகள் மற்றும் வாசகர்களுக்கு அளிக்கப்படும் சேவைகள் குறித்து பொது நூலக இயக்குநர் அவர்கள் விளக்கினார். இந்நிகழ்வில் அண்ணா நூற்றாண்டு நூலகத்தின் நூலகர் மற்றும் தகவல் அலுவலர்கள் உடனிருந்தனர்.

**************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in